## இளைஞர்களின் எழுச்சி ஞாயிறு - கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளந்தலைவர்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் நிகழ்ச்சிகள்!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) தனது பிறந்தநாளையொட்டி சென்னை வேப்பேரி பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.



தனது பிறந்த நாளை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லம் சென்று கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



தமது பிறந்த நாளான நேற்று, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சி.ஐ.டி. காலனி இல்லம் சென்று கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளார்.



தனது பிறந்த நாளை முன்னிட்டு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கிய காட்சி.

## துணை முதல்வரே, பிரியமான பிறந்தநாள் வாழ்த்துகள்!



துணை முதல்வரே!

முதல்வரின் ஒருமகனாகிய
திருமகனே!

பிரியமான
பிறந்தநாள் வாழ்த்துக்கள்

உங்களுக்கு மூன்று பலங்கள்

மூன்றாம் பலம்
இளமையும் புன்னகையும்

இரண்டாம் பலம்
தாத்தாவின் வரலாறும்
தந்தையின்
உழைப்பும்

முதல் பலம்
இயக்கத்தின் கட்டமைப்பும்
இற்றுவிடாத கொள்கையும்

எட்டுக்கோடித் தமிழர்களில்
இந்த மூன்றும் வாய்த்த
ஒரே இளைஞர் நீங்கள்தான்

மேற்சொன்ன மூன்றையும்
நேர்மையில் தீட்டிக்
கூர்மை செய்தால்
எட்டாத உயரம் எட்டலாம் நீங்கள்

வளர்பிறை வாழ்த்து!

—கவிப்பேரரசு வைரமுத்து